★ சங்கானை ப. நோ. கூ. சங்கத்துக்கு

# நிவாரணத்துக்கு வந்த ஹைலண்ட் பால்மா தீங்கானது என பரிசோதனையில் கண்டுபிடிப்பு

சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு நிவாரணத்திற்கு வழங்குவதற்காக அனுப்பி வைக்கப் பட்ட 'ஹைலன்ட்' பால்மாபைக்கற்றுகளில் ஒரு பகுதி மக்கள் பாவனைக்கு தீங்கானது என்று யாழ் மாவட்ட உணவு, மருந்து பரிசோதகர் மேற்கொண்ட பரி சோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து சேதமடைந்த பால்மா பைக் கற்றுகள் நிவாரணத்திற்கு வழங்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. யாழ் மாவட்ட உணவு, மருந்துப் பரிசோதகரின் அறிக்கையை அடுத்து சங்க நிர்வாகம் இது பற்றி யாழ் அரசாங்கசெயலகத்தின் அதிகாரிக ளுக்கு முறையிட்டு நல்ல ரக பால் மா பைக்கற்றுகளை நிவாரணத்திற்கு வழங்குவதற்கு தந்து உதவுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது. கப்பல் மூலம் வடக்கே அனுப்பப்படும் உணவுப் பொருள்கள் பழுதடைந்து உள்ளதாக உணவுப்பகுதியினரும், கூட்டுறவு வட்டா ரங்களும் பல தடவைகள்

—04ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா: 4 50

முரசொலி

முரசு 05 ஒலி 207 பிரசோற்பத்தி ஆனி 09 ( 23-06-1991 ) ஞாயிறு

# குண்டுவெடிப்புத் தொடர்பான புலன் விசாரணை ஆரம்பம்!

## தாக்குதல் பட்டியலில் பிரேமதாஸவின் பெயரும் இடம்பெற்றுள்ளது!

**நேற்று முன்தினம் கொழும்பில் இராணுவத் தலைமையகம் மீது நடாத்தப்பட்ட வாகன வெடிகுண்டுத் தாக்குதல் குறித்து புலன் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன.**

இதேவேளை கொழும்பில் முக்கிய கட்டிடங்கள் அலுவலகங்கள் குறிப்பாக வாகன வெடிகுண்டு தாக்குதலுக்கு இலக்காகக் கூடிய கட்டிடங் களுக்கு பொலிஸ பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

ரூபவாஹினி, ஐ ரி. என், வானொலி நிலையங்களினுள் மக்கள் செல்வதும் நேற்று முதல் தடைசெய்யப்பட்டது.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பாக கொழும்பில் தமிழர் ஒருவர் கைது செய் யப்பட்டுள்ளார்.

தாக்குதல் குறித்து புலன் விசாரணை நடாத்திவரும் குழுவினர் தாக்குதல் பட்டி யல் குறித்து தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாக தெரிவித் துள்ளனர்.

இப்பட்டியலில் ஜனாதிபதி பிரேமதாஸவின் பெயரும் உள்ளது என புலன் விசார ணைக் குழுவினர் குறிப்பிட்ட தாக 'பி. பி. ஸி நேற்றிரவு குறிப்பிட்டது.

இதனால் ஜனாதிபதிக்கான பாதுகாப்பு உஷார் படுத்தப் பட்டுள்ளதாகவும் மக்களை எச்சரிக்கையாக இருக்கும் படி கோரப்பட்டுள்ளதாகவும் பி. பி. ஸி குறிப்பிட்டது.

என்னதான் பாதுகாப்பு பலப்படுத்தினாலும் தற் கொலை படைத் தாக்குதல் என்று வந்து விட்டால் அதை யாராலும் தடுக்க முடியாது என பி. பி. ஸி சுட்டிக்காட்டி யது.

## பாதுகாப்பு அமைச்சின் படையினர் உதவித் திட்டம்

புதிதாக பதவியேற்றுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மகிந்த பந்து சென தலைமையில் படையி னருக்கு உதவி வழங்கும் திட் டம் ஒன்று தயாரிக்கப்பட் டுள்ளது.

வடகிழக்கில் உள்ள படை யினருக்கு பொது மக்களிடம் சேகரிக்கப்பட்ட பொருள் களை நேரில் சென்று கைய

—4 ஆம் பக்கம் பர்ர்க்க

## கருணாநிதி பதவியிலிருந்து இராஜினாமாச் செய்தார்

தி. மு. க. தலைவர் மு கருணாநிதி தனது சட்டப் பேரவை உறுப்பினர்பதவியை இராஜினாமாச் செய்து விட் டார்.

கடந்த தேர்தலில் தி.மு.க. 171சட்டப் பேரவைத் தொகு திகளில் போட்டியிட்டும் கரு ணாநிதி மட்டுமே சென்னை துறைமுகம் தொகுதியில் வெற்றிபெற்றார்.

— 4 ஆம் பக்கம் பார்க்க

## நம்பிக்கையில்லா தீர்மானம் பி. ஜே. பி. கொண்டுவரும்

புதிதாகப் பதவியேற்றுள்ள நரசிம்மராவ் அரசுக்கு எதி ராகச் சபையில் நம்பிக்கை யில்லாப் பிரேரணை கொண்டுவரவுள்ளதாக பிரதான எதிர்க்கட்சி பார திய ஜனதா அறிவித்துள் ளது.

புதிய சிறுபான்மைப் பலம் கொண்ட காங்கிரஸ் அரசு பாராளுமன்றத்தில் தனது

— 4 ஆம் பக்கம் பார்க்க

## இராமர் கோயில் பிரச்சினை பி. ஜே. பி ஆரம்பிக்கிறது

அயோத்தியில் மீண்டும் இராமர் கோயில் கட்டும் பிரச் சினையை பாரதிய ஜனதா மீண்டும் எழுப்பக்கூடிய நிலை மை எழுந்துள்ளது.

உத்தரப்பிரதேசத்தில் தம க்கு கிடைத்த அமோக ஆத ரவு இம் மாநில மக்கள் இரா மர் கோயில் தொடர்பாக பி. ஜே. பி கொண்ட நிலைப் பாட்டை ஆதரிப்பதையே

— 4 ஆம் பக்கம் பார்க்க

## மகிந்தபுரத்தில் புதிய முகாம்

திருமலை மகிந்தபுரம் பகுதியில் இராணுவத்தினர் புதிய முகாம் ஒன்றை அமைத் துள்ளனர்.

இதேவேளை தோப்பூர் பகுதியில் இரு மீனவர்கள் படையினரால் சுட்டுக்கொல் லப்பட்டுள்ளனர்.

## சுற்றிவளைப்பு

மட்டக்களப்பில் மண்டூர், சின்னவத்தை, 14 ஆம் கொலனி முகாமிலுள்ள படையினர் நெடியவெட்டை கிராமத்தைச் சுற்றிவளைத் தனர்.

களுவாஞ்சிக்குடி முகாம் படையினரும் எருவில், குரு மண்வெளி, மகிழூர் ஆகிய கிராமங்களைச் சுற்றி வளைத்துத்தேடுதல் நடாத்தி னர்.

## நிகழ்ச்சிகள் ஒத்திவைப்பு

கொழும்பு குண்டு வெடிப் புச் சம்பவத்தையடுத்து கொழும்பு நகரில் நடைபெற விருந்த பல கலை நிகழ்ச்சிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக தமிழர்களின் நிகழ்ச்சிகளும் கூட்டங்களும் ஒத்திவைக்கப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

33

## தமிழக ஜனாதிபதி ஆட்சி நேற்று முதல் நீக்கம்

தமிழ்நாட்டில் கடந்த ஜன வரி மாதம் 31 ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்ட ஜனாதிபதி ஆட்சி நேற்று நீக்கப்பட்டது

இதற்கான பிரேரணை நேற்று இந்தியப் பாராளுமன் றத்தில் நிறைவேறியது.

தி. மு. க ஆட்சியை கலைத்த முன்னைய சந்திர சேகர் அரசு தமிழகத்தில் ஜனாதிபதி ஆட்சியை கொண் டுவந்தது.

## கல்லூரி மாணவர்கள் சிலரும் காயமடைந்தனர்

நேற்று முன்தினம் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தின் போது அருகில் இருந்த லேடீஸ் கல்லூரி, றோயல் கல்லூரி, தேஸ்டன் கல்லூரி என்பனவும் சேத மடைந்திருக்கலாம் என நம் பப்படுகிறது.

இங்கு கல்விபயிலும்மாணவ மாணவிகளும் இச் சம்பவத் தில் காயமடைந்தனர் என வும் தெரிவிக்கப்படுகிறது.

## விவசாயிகளிடம் இராணுவம் பணம் தருமாறு மிரட்டல்

மட்டக்களப்பு பெரியபோர தீவு முகாம் படையினர் போரதீவு, கல்லடிப் பற்று பகுதிகளில் விவசாயி களிடம் பணம் தருமாறு மிரட்டி வருகின்றனர்

விவசாயிகள் ஒவ்வொரு வரும் ஐந்நூறு ரூபா வழங்க வேண்டும் என படையினர் மிரட்டியதையடுத்து அப் பகுதி விவசாயிகள் தமது வீடுகளை விட்டு வெளியேறி யுள்ளனர்.

## இந்தியத் தூதரகத்திற்கு பாதுகாப்பு வழங்கப்பட்டது

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்துக்கு பலத்த பாது காப்புவழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற குண்டுவெடிப்புச் சம் பவத்தையடுத்து இவ்வாறு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகி றது

## மட்டுநகர் சந்தையில் தராசுகள் பறிமுதல்

மட்டக்களப்பு பொதுச் சந்தைக்குள் திடீரெனப் புகுந்த பொலிஸார் வியா பாரிகளிடம் இருந்து 'சீல்' பதியப்படாத சுமார் நூற் றுக்கும் மேற்பட்ட தராசு களை எடுத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது

இது தொடர்பாக மட்டக் களப்பு நீதிமன்றத்திலும் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டது. இரு வழக்குகள் தள் ளுபடி செய்யப்பட்டன

தராசுகள் சீல் வைப் பதற்கான அதிகாரி கடந்த நான்கு வருடங்களுக்கு முன் னர் மரணமானதாகவும், இதுவரை அப்பதவிக்கு எவ

— 4 ஆம் பக்கம் பார்க்க

## குப்பிளானில் மோதல்

நேற்று மாலை 4 மணிக்கு பலாலியிலிருந்து இராணுவத் தினர் குப்பிளான் பகுதி நோக்கி முன்னேற முயன்ற போது விடுதலைப் புலிகள் எதிர்த்து கடும் தாக்குதல்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## 400 பேர் பலி

இராணுவ நடவடிக்கை காரணமாக தீவுப் பகுதியில் இதுவரை 400 பேர் மரணமாகியுள்ளதாக கிராமசேவையாளர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பு ஒன்று தெரிவிக்கின்றது. ப 11

## மாதாந்தச் சம்பளப் பட்டியலுடன் அறிக்கை சமர்ப்பிக்கப் பணிப்பு

மருதனாமடம் கல்விக் கோட்டத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகளின் அதிபர்கள் மாதாந்தச் சம்பளப் பட்டியலுடன் ஆசிரியர்களின்கற்றல், கற்பித்தல் நிகழ்ச்சிகள் பற்றிய அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென மருதனாமடம் உதவிக் கல்விப் பணிப்பாளர் பணித்துள்ளார்.

இவ்வறிக்கையைச் சமர்ப்பிக்காத சில அதிபர்களின் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இம்மாதச் சம்பளம் தடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. 30

## 14 கட்ட நிவாரணம் மட்டுமே

யாழ் மாவட்டத்தில் சகலருக்கும் 42 கட்டங்களில் அரசு நிவாரணங்களை வழங்குவதற்கு ஒத்துக் கொண்டிருந்த போதிலும் 14 கட்ட நிவாரணங்களே இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

இதிலும் சகலருக்குமான இலவச உலர் உணவு நிவாரணம் 6 கட்டங்கள் மட்டுமே வழங்கப் பட்டுள்ளன. ப 11

### காணவில்லை

இராசையா துஷ்யந்தன் (குகா) என்பவர் கடந்த 20. 6. 91 இலிருந்து காணாமல் போய்விட்டார். இவரின் வயது பதினைந்து, பொதுநிறம், உயரம் சாதாரணமாக மூன்று அடிமட்டும், மூளை வளர்ச்சி குன்றியவர். இவர் கடைசியாக மங்கல்பச்சை நிறமுள்ள சாரம் உடுத்திருந்தார். இவரைக்கண்டால் தயவுசெய்து பின்வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். ச. கனகரத்தினம், மட்டுவில் தெற்கு, வைரவகோயிலடி, சாவகச்சேரி.

06084

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

யாழ் பல்கலைக்கழக கிளிநொச்சி விவசாய பீடத்தில் விலங்கு வேளாண்மைத் துறைக்கு பண்ணை அமைப்பதற்குகந்த கால்நடைகளை வழங்குவதற்கான

## கேள்விப்பத்திரங்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கால்நடைகளை வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் அவற்றை வைத்திருப்பவர்களிடம் இருந்து கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் கீழ் உள்ள மாதிரிப் படிவத்தில் குறிப்பிடப்பட்டவாறு தேவையான விபரங்களுடன் 12.07.91 காலை 10.00 மணிக்கு முன்னர் பதிவாளர் யாழ்/பல்கலைக் கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''கால்நடைகள் வழங்குவதற்கான கேள்விபபத்திரங்கள்'' என்று குறிப்பிட்டு அனுப்பப்படுதல் வேண்டும்.

1. தூயஜமுனாபாறி,சாணான்மறிஆடுகளைவழங்குதல்:
யாழ் குடாநாட்டுப் பகுதியில் இருந்து தூய இன ஜமுனா பாறி, தூய இன சாணான் 08-18 மாத வயதிற்கிடைப்பட்ட மறி ஆடுகளை வழங்க விரும்புபவர்கள் வழங்க இருக்கும் ஆடுகளின் எண்ணிக்கை, இனம், ஒவ்வொன்றினதும் மொத்த நிறை கிலோவில், வயது, உயிருடன் கிலோ ஒன்றிற்கு கோரும் விலை முதலிய விபரங்களைக் குறிப்பிட்டு விண்ணப்பித்தல் வேண்டும்.

2, தூய இன ஜமுனாபாறி, சாணான் கடா ஆடுகளை வழங்குதல்:-
யாழ் குடா நாட்டுப் பகுதியில் இருந்து ($1\frac{1}{2}-2\frac{1}{2}$) ஒன்றரை, இரண்டரை வயதிற்கு இடைப்பட்ட தூய இன ஜமுனா பாறி, சாணான் இன விருத்திக்குகந்த கடா ஆடுகளை வழங்க விரும்புபவர்கள் வழங்க விரும்பும் ஆடுகளின் இனம், வயது ஒவ்வொன்றினதும் மொத்த நிறைகிலோவில், எண்ணிக்கை, உயிருடன் கிலோ ஒன்றிற்குக்கோரும் விலை முதலிய விபரங்களைக் குறிப்பிட்டு விண்ணப்பித்தல் வேண்டும்.

3. நாட்டு இன மறி ஆடுகளை வழங்குதல்:-
இன விருத்திக்காக நாட்டு இனவகை ($1-1\frac{1}{2}$) ஒன்று, ஒன்றரை வயதிற்கு இடைப்பட்ட மறி ஆடுகள் அதிக எண்ணிக்கையில் தேவை படுகின்றன கிளிநொச்சிப் பிரதேசத்தில் இருந்து இவ்வின மறி ஆடுகளை, வழங்க விரும்புபவர்கள் வழங்க விரும்பும் ஆடுகளின் எண்ணிக்கை, ஒவ்வொன்றினதும் மொத்த நிறை கிலோவில், இனம், உயிருடன் கிலோ ஒன்றிற்கு கோரும் விலை விபரங்களை குறிப்பிட்டு விண்ணப்பித்தல் வேண்டும்.

பதிவாளர்
யாழ் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

### மாதிரிக் கேள்விப் பத்திரம்

1. முழுப் பெயர்:-
2. முகவரி:-
(நேரடியாக வந்து பார்வையிடக்கூடிய முறையில் முகவரியை விபரமாகக் குறிப்பிடவும்)
3. கால்நடைகள் இருக்கும் இடம்:-
   1. கிராமம்
   2. உதவி அரச அதிபர் பிரிவு
   3. மாவட்டம்
4. வழங்க விரும்பும் கால்நடைகளின் விபரமும் கோரும் விலையும்.
   1. இனம்
   2. வயது
   3. எண்ணிக்கை
   4. பாலின் அளவு (லீற்றரில்)
   5. ஒவ்வொன்றினதும் மொத்த நிறை கிலோவில்
   6. உயிருடன் கிலோ ஒன்றிற்கு கோரும் விலை
5. மேற்குறிப்பிடப்பட்ட கால்நடைகளை கையளிக்கக் கூடிய இடம். (முகவரி)

கேள்விப் பத்திரங்கள் 12.07.91 காலை 10.30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக சபை மண்டபத்தில் திறக்கப்படும்.

06079

---

### இதுவே இவர்களின் முதற் கடமையாம்

தமிழக முதல்வராகத் தெரிவாகியுள்ள ஜெயலலிதாவுக்கு இந்திய நாட்டில் எந்த அரசியல் வாதிக்கும் இல்லாத அளவுக்கு உயிர் ஆபத்து உள்ளதாக இந்திய புலனாய்வுத் துறை எச்சரித்துள்ளது,

இதனையடுத்து தமிழக சட்டசபைக்குத் தெரிவாகியுள்ள புதிய உறுப்பினர்கள் தமது தலைவியைக் காப்பதே தமது முதற் கடமையெனத் தெரிவித்துள்ளனர்.

### நிலையங்கள் அதிகரிப்பு

இவ்வருடம் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த சாதாரண தரப் பரீட்சை நடக்கவுள்ள நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் இம்முறை 40 பரீட்சை இணைப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளது. 74

### துடுப்பாட்ட சுற்றுப் போட்டி

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் பாடசாலைகளுக்கிடையிலான துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றினை நடாத்துகின்றது.

15 வயதுக்குட்பட்டோர், 17 வயதுக்குட்பட்டோர் என இரு பிரிவாக நடைபெறும் போட்டிகளில் யாழ்ப்பாண மாவட்டத்தின் பிரபல பாடசாலைகள் பங்கு பற்றுகின்றன. 30

### தெல்லிப்பழை மினி பஸ் சேவை

தெல்லிப்பழையில் இருந்து யாழ் நகருக்கு மினி பஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சேவை அரசஊழியரின் போக்குவரத்து வசதிக்காகவே ஆரம்பிக்கப்படுவதாகவும் தெரிவிக்க பட்டுள்ளது

சிறு விளம்பரம்

தேவை
மலைவேம்பு விதைகள் தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். 06073

---

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



2 ஆவது லெப்டினன் றெனோ
வி. தீபாகரன் மறவன்புலோ

வீர மலர்வு: 22. 12. 73 | வீர மறைவு: 23. 06. 90

23 6. 90 அன்று பலாலியில் சிறிலங்கா இராணுவத்துடன் இடம்பெற்ற நேரடி மோதலில் இவர் வீரமரணமடைந்தார்.
தமிழீழ வேட்கையினால் தளர்வறியா வீரத்தால்
சிங்களத்து இராணுவத்தைச் சிதறடிக்கச் செய்தவனே
எங்கள் றெனோவே இனிய குணமுடையாய்
என்றும் நம் நெஞ்சத்தே இருக்கின்றாய் நாம் மறவோம்!

குடும்பத்தினர்

06078

DIPLOMA IN NURSING
தாதியர் பயிற்சி நெறி
புதிய பயிற்சி நெறிககான விரிவுரைகள் ஆரம்பம்
24. 06. 1991

★ ஆறுமாதகால இலகு விரிவுரைகள்
★ சிறந்த தகுதி வாய்ந்த விரிவுரையாளர்கள்
★ பயிற்சிக்குகந்த ஆங்கில பார்மஸி வகுப்புகள்
★ உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குகந்தது

விபரங்களுக்கு:
North Ceylon Technical Institute
14, St. Peters Lane, Hospital Road, Jaffna.
06080

# கொழும்பில் பெரும் பீதி!

## ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுத் தேடுதல்

**முப்படைத் தலைமையகக் குண்டு வெடிப்பையடுத்துக் கொழும்பில் தமிழர்கள் கூடுதலாக வசிக்கும் சில பகுதிகளில் உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுப் பொலிஸாரின் சந்தேகத்திற்கிடமான பல தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாக நேற்று இங்கு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.**

சம்பவம் நடைபெற்ற பகுதிக்கு அருகில் பயணம்செய்த சில தமிழர்கள் காணாமற்போயுள்ளதாகவும் மற்றொரு தகவல் தெரிவிக்கின்றது.

கொழும்பில் தமிழர்கள் மத்தியில் பதற்றம் காணப்படுவதாகவும், வதந்திகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

நேற்றுக் கொழும்பு மாநகரில் வாகனப் போக்குவரத்துக்களும், சனநடமாட்டங்களும் குறைந்து, எங்கும் பீதி நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. 74

## திருமணமாகாத இராணுவத்தினர்

## தங்கும் விடுதியும் நிர்மூலம்!

கடந்த வெள்ளிக்கிழமை காலை கொழும்பில் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பினால் கூட்டுப்படைத்தலைமையகக்கட்டிடத்துடன் அதற்கு அருகில் அமைந்திருந்த திருமணமாகாத இராணுவத்தினர் தங்கும் விடுதியும் நிர்மூலமாகியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன

இந்த விடுதியில் பல இராணுவத்தினர் அச்சமயம் தங்கியிருந்ததினால் படையினருக்கு ஏற்பட்ட உயிர்ச்சேதம் அறிவிக்கப்பட்டதைவிட மேலும் அதிகமாக இருக்கும் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன

இதே வேளைஇந்தக்குண்டு வெடிப்புச்சம்பந்தமான விசாரணைகளை மேற்கொள்ள சிரேஷ்ட பொலிஸ் அதிபர் கொட்பிறி குணசேகர தலைமையில்விசேட பொலிஸ்க்குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது

## அஸ்பெஸ்டஸ்கூரைத்தகடுகளின் உற்பத்தி கட்டுப்படுத்தப்படும்

இலங்கையில் அஸ்பெஸ்டஸ் கூரைத்தகடுகளின் உற்பத்தியைக் கட்டுப்படுத்த அரசு தீர்மானித்துள்ளதாக அறியப்படுகின்றது.

இங்கு உற்பத்தி செய்யப்படும் அஸ்பெஸ்டஸ் சீற்புற்றுநோய் பரவுவதற்கு ஒரு காரணமாக அமைந்துள்ளதாக மத்திய சூழல் அதிகாரசபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதை அடுத்தே இந்த நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

அஸ்பெஸ்டஸ் கூரைத்தகடுகளினால் மனித ஆரோக்கியத்திற்கு ஏற்படும் அபாயத்தை இனங்கண்டு பலநாடுகள் இக் கூரைத்தகடுகளின் உற்பத்தியை இடைநிறுத்தி அவற்றை வேறு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதையே விரும்புகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. ப-11

## உயர்தர வகுப்பு ஆரம்பம்

சங்கானைசிவப்பிரகாச வித்தியாசாலையில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தர வகுப்புக்களை ஆரம்பிக்கக் கல்வித்திணைக்களம்அனுமதிவழங்கியுள்ளது.

அதனைத் தொடர்ந்து 1993 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்கான உத்தேச வகுப்புக்கள் அங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 30

## முன்பள்ளிப் பாடசாலைகளில் கணக்கெடுப்பு நடாத்தப்படும்

வடக்கு கிழக்கு மாகாணத்தில் 1991 ஆம் ஆண்டு முதல் இயங்கிக் கொண்டிருக்கின்ற சகல முன்பள்ளிக் கல்வி நிறுவனங்களினதும் கணக்கெடுப்பு இவ்வாண்டுக்குள் செய்து முடிக்கப்படவுள்ளதாக வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சகல கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தி உள்ளார்.

இதற்கான விவரங்களைப் பாடசாலை மட்டத்தில் எடுத்துக் கொத்தணி அதிபரின் சிபார்சுடன் முகாமைத்துவமும், அமுலாக்கலும் தொடர்பான வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பணிப்பாளருக்கு உடன் அனுப்பி வைக்குமாறும் அவர் கோரியுள்ளார். 78

## தெலுங்கரான நரசிம்மராவ்

## 10 மொழிகளில் பேசக்கூடியவர்

இந்தியாவின் புதிய பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள வெங்கட நரசிம்மராவ் பத்து மொழிகளில் பேசக்கூடிய பாண்டித்தியம் பெற்றவர்.

1921 ஜூன் 28 ஆம் திகதி ஆந்திராவில் பிறந்த இவர் தனது தாய்மொழியாகத் தெலுங்கு மொழியைக் கொண்டுள்ள போதிலும் மராட்டி, ஹிந்தி மொழிகளிலும் பல இலக்கிய நூல்களை எழுதியுள்ளார்.

அரசியல் வாதிகளுக்கு இருக்கவேண்டிய சிறப்பான கவர்ச்சியோ, பாட்டாளி மக்களின் அமோக ஆதரவோ இவருக்கு இல்லை- ஆனால் மக்களுடன் ஒத்துப்போகும் தன்மையைக் கொண்டவர் நரசிம்மராவ்பாராளுமன்றத்தில் இரு சபைகளிலுமேஇடம் பெறவில்லை. இவர் 6 மாத காலத்துக்குள் ஏதாவது ஒரு தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும்.

## 72பேருக்குப்பதில்50 பேர் கடமையில்!

## நெடுந்தீவில் ஆசிரியர் பற்றாக்குறை

நெடுந்தீவுப் பகுதிப்பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் அதனை நீக்கும் நோக்குடன் தொண்டர் ஆசிரியர்களை நியமனம் செய்ய அனுமதி வழங்குமாறும் நெடுந்தீவு கொத்தணிப்பாடசாலை அதிபர் பி. எம். ஜே. அன்ரனி வேலணைக் கோட்டக்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளரிடம் கோரியுள்ளார்.

முன்னர் எழுபத்திரண்டு ஆசிரியர்கள் இக்கொத்தணிப் பாடசாலைகளில் கற்பித்ததாகவும் தற்போது ஐம்பது ஆசிரியர்கள் மட்டுமே உள்ளதாகவும் அங்கு கணித விஞ்ஞான ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்

இங்கு கற்பித்த ஆசிரியர்களில் பெரும்பாலானோர் ஆசிரியபயிற்சிக் கலாசாலைக்குச் சென்றுள்ளதும் இராணுவநடவடிக்கை காரணமாக இந்தியாவுக்குச் சில ஆசிரியர்கள் சென்றுதிரும்பாததும் மேலும் சிலஆசிரியர்கள் ஓய்வுபெற்றதும் இவ் ஆசிரியர் பற்றாக்குறைக்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. 78

### விடுவிக்கக் கோரிக்கை

வவுனியாவில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட யாழ் கலைப்பீட மூன்றாம் வருட மாணவன் எஸ் ஜெயசீலனை விடுவிக்க நடவடிக்கையெடுக்குமாறு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவரை யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் கேட்டுள்ளார்.

### சாரணர் காரியாலயம்

யாழ்-மாவட்ட சாரணர் காரியாலயம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு பருத்தித்துறை வீதியில் ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

மாவட்ட ஆணையாளர் ஆ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவிருக்கும் இத் திறப்புவிழாவினைத்திரு.எஸ். காந்தமூர்த்தி அவர்கள் நடத்திவைப்பார்கள்.

முன்னாள் மாநகர ஆணையாளர் சி.வி. கே. சிவஞானம் பிரதம விருந்தினராக இத் திறப்பு விழாவில் கலந்து கொள்கிறார். 47


### உடன் தேவை

5KVA வலுவுடைய நன்கு இயங்கும் திறனுடைய டீசல் அல்லது மண்ணெண்ணெய் ஜெனரேட்டர் ஒன்று உடன் தேவைப்படுகிறது.

மண்ணெண்ணெயில் இயங்குதற்கு முன்னுரிமை வழங்கப்படும் முழுவிபரங்களுடன் தபால் மூலம் அல்லது நேரில் தொடர்பு கொள்ளவும் விளம்பர இல 300 மே/பா முரசொலி, கல்வியங்காடு.

06028


## சிறிய செய்திகள்

### சின்னஞ்சூட்டும் விழா

யாழ் வைத்தீஸ்வர வித்தியாலய சாரணர் குழு சின்னஞ்சூட்டும் விழா 24 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அதிபர் சி. சிவசரவணபவன் தலைமையில்நடைபெறவுள்ள இவ்விழாவில் யாழ் கல்விக் கோட்டக் கல்வி அதிகாரி த. துரைசிங்கம் கலந்துகொள்ளுவார்.

### சுன்னாகம் ஐயனார் சங்காபிஷேகம்

சுன்னாகம் ஐயனார் ஆலய சங்காபிஷேகம் 23ஆம் திகதி காலை 7 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது 1008சங்கு அபிஷேகமும், பகல் அடியார்களுக்கு அன்னதானமும் நடைபெறும். அதைத் தொடர்ந்து மாலை 5மணிக்கு ஐயனார் பெருமானுக்குத் திருக் கல்யாணம் நடைபெறும்.

விசேட நிகழ்ச்சிகளாக மாலை 6.30 மணிக்கு விசேட மேளக்கச்சேரியும், 7.30மணிக்குப் பொன். சுந்தரலிங்கம் அவர்களின்இசைக்கச்சேரியும், 9.30 மணிக்கு அகிலஇலங்கை கம்பன் கழக அமைப்பாளர் இ ஜெயராஜ் அவர்களின் தலைமையில் பட்டிமன்றமும் 12 30 மணிக்கு சாந்தன் கோஷ்டியினரின் எழுச்சிப் பாடல்களும் இடம்பெறுகின்றன,

### மாவீரர் நினைவுப்போட்டி

யாழ் மத்தியூஸ் வீதி கிறீன் கிங்ஸ் விளையாட்டுக் கழகத்தினரால் 2ஆம் லெப். ஞாபகார்த்தஉதயகுமார்சுதா ஞாபகார்த்தமாக 7 பேர் கொண்ட 12 ஓவர் மென்பந்து கிரிக்கட் போட்டியும், வீரவேங்கை பெனிஞாபகார்த்தமாகபெண்கள் வலைப் பந்தாட்டப் போட்டியும் 2ஆம்லெப். நிக்ஷன்ஞாபகார்த்தமாக குருநகர் கிழக்கு சிற்றூரவைக்குட்பட்ட 7 பேர் கொண்டகுழுக்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியும் நடாத்தப் படவுள்ளன

போட்டிகள் யாவும் விலக்கல் முறையில் நடைபெறும். வெற்றி பெறுவோருக்கு வெற்றிக் கேடயங்கள் வழங்கப்படும்.

இ போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்த்தினப் போட்டி

1991 ஆம் ஆண்டு யாழ்-கல்வி மாவட்டத் தமிழ்த் தினப்போட்டிகள் யாழ் இந்து மகளிர் கலலூரியில இம் மாதம்28ஆம் திகதியும்29ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

நிகழ்ச்சிகள் விவரம் வருமாறு: 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை வாசிப்பு, எழுத்து, கட்டுரை, ஆக்கம், பேச்சு, பா ஓதல், இசை என்பனவும் 29 ஆம் திகதி சனிக்கிழமை பா ஓதல் இசை, நடனம், நாடகம், பல்லியம், வில்லுப் பாட்டு, கதாப் பிரசங்கம், இசை இடையிட்ட உரைச் சித்திரம், நடன நாடகம் / நாட்டுக்கூத்து, இசை நாடகம் என்பன.

29 ஆம் திகதி 1 மணிக்கு சான்றிதழ் வழங்கும் வைபவமும் நடைபெறும். யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 118 பாடசாலைகள் பங்கு பற்றுகின்றன.

### 200 ஏக்கரில் வெங்காயச் செய்கை

வவுனியா கிழக்கு மூலை தெற்குப் பகுதியில் பெரிய வெங்காயச் செய்கையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கையில் வவுனியா விவசாயத் திணைக்களம் சர்வதேச போருட்தொண்டர்நிறுவனத்தின் உதவியுடன் ஈடுபட்டுள்ளது.

சின்ன வெங்காயத்திலும் பார்க்க பெரிய வெங்காயச் செய்கை அதிகலாபத்தை ஈட்டித்தர வல்லதாக உள்ளதால் ஊக்குவிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அங்கு சுமார் 200 ஏக்கரில் வெங்காயச் செய்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### சித்திவிநாயகர் மகாகும்பாபிஷேகம்

புன்னாலைக்கட்டுவன் அருள்மிகு சித்திவிநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை பகல்10மணி தொடக்கம் 11.30 மணிவரை இடம் பெறும். தொடர்ந்து மகாபிஷேகமும் நடைபெறும்.

மேற்படி ஆலய புனருத்தாரண வேலைகள் ஆயக்கடவை சித்திவிநாயகர் தேவஸ்தான பரிபாலன சபையினரால் பல சிரமங்களுக்கு மத்தியில் வெகு சிறப்பாக செய்து முடிக்கப்பட்டுள்ளன.

### ஆண்டுவிழா போட்டிகள்

கொய்யாத்தோட்டம் சன சமூக நிலையம், கொய்யாத்தோட்டம் ஐக்கிய விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து ஆண்டு விழாவினை மிக விரைவில் கொண்டாடவுள்ளது.

ஆண்டுவிழா சம்பந்தமாக மாவட்ட ரீதியில் கீழ்க்குறிப்பிடப்படும் சுற்றுப் போட்டிகளையும் நடாத்துவதெனத் தீர்மானித்துள்ளது.

கரபந்தாட்டம் 6 பேர் கொண்டது (ஓவர் கேம்) கரப்பந்தாட்டம் 6 பேர் கொண்டது (செற்அப் கேம்) மென்பந்து எறிபந்தாட்டம் 11 பேர் கொண்டது (20 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கள்)

இவைதவிர இச் சன சமூக நிலையத்தின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கிடையே கலை கலாசாரப்போட்டிகளையும், மெய்வல்லுநர் போட்டிகளையும்நடாத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கலைகலாசாரப் போட்டிகளுள் திருக்குறள் மனனம், ஓவியம், பேச்சு, கவிதை சிறுகதை, பொது அறிவு, நாட்டுப்பாடல் முதலியன அடங்கும்.

மாவட்ட ரீதியிலான போட்டிகளின் விண்ணப்ப முடிவு திகதி 30.06.91ஆகும். 16,47

### வாழைநார் பொருள் உற்பத்தி

யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தினரின் ஏற்பாட்டில் வாழை நாரில் பொருள்கள் உற்பத்தி செய்தல் பயிற்சியில் பங்கு கொண்டவர்களும், பங்கு கொள்ள விரும்புவோர்களும் எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ் கண்டி வீதியில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத்தில் நடைபெறவுள்ள கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு செஞ்சிலுவைச்சங்கச் செயலாளர் கேட்டுள்ளார் 19

## பனைவள ஆய்வரங்கும் கண்காட்சியும்

யாழ் விஞ்ஞான மன்றமும், பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியமும் இணைந்து யாழ் பல்கலைக்கழகத்தில் இம்மாதம் 29,30 ஆம் திகதிகளில் பனைவள ஆய்வரங்கையும்,கண்காட்சியையும் நடாத்தவுள்ளன.

தற்போது உள்ள பொருளாதார நெருக்கடியில் தமிழரின் தேசியவளமான பனையின் பயன்பாட்டைச் சித்திரிக்கும் வகையிலும், அதன் பொருளாதார முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையிலும் அமையும் இக்கருத்தரங்கையும், கண்காட்சியையும் அனைவரும் கண்டு மேலும் இதன் பயன்பாட்டை மேலோங்கச் செய்ய ஆக்கபூர்வமான ஆலோசனைகளைத் தந்துதமிழீழத்தின் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பனை வளத்தின் பயனை முழுமையாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் என வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் கேட்டுள்ளது.

## வாழப்பாடி சென்னை வருவார்

நாளை தமிழக முதலமைச்சராக ஜெயலலிதா பதவி ஏற்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முன்னாள் தமிழக காங்கிரஸ் தலைவரும் தற்போதைய மத்திய இராஜாங்க அமைச்சருமான வாழப்பாடி ராமமூர்த்தி கலந்துகொள்ள டில்லியில் இருந்து தமிழகம் வரவுள்ளார். தமிழக காங்கிரஸ் தலைவராக தற்போது பி. சண்முகம் நியமிக்கப்பட்டுள்ளார்.

## சனசமூக பொதுக்கூட்டம்

வட்டுக்கோட்டை உப அலுவலக பிரிவுக்குட்பட்ட சன சமூக நிலைய உறுப்பினர்களுக்கான விசேட பொதுக் கூட்டம் இன்று 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வட்டுக்கோட்டை உபஅலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டு சனசமூக நிலையங்களினதும் உறுப்பினர்களதும் பணிகள் பற்றி உரையாற்றவுள்ளனர். 12

## அடைக்கப்பட்ட கள் விற்பனைக்கு வரும்

சங்கானையிலுள்ள வட்டுக்கோட்டைதொகுதிதெங்குபனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்கத்தின் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட 65 ஆயிரம் போத்தல் கள் களஞ்சியப் படுத்தப்பட்டுள்ளது.

'கள் சீசன்' குறைந்து வரும் மாதங்களில் சங்க தவறணைகள் மூலம் இந்த போத்தலில் அடைக்கப்பட்ட கள் விற்பனைக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 13

## றெனோ நினைவாக

2ஆம் லெப் றெனோ (திபாகரன்) நினைவாக றெனோ வீதியில் சனசமூக நிலையம் ஒன்று இன்று மாலை மறவன் புலோவில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

## விமானத் தாக்கு

நேற்று முற்பகல் 10 மணியளவில் ஆனையிறவு சுற்றாடற் பகுதியினை நோக்கி அவ்ரோ விமானம் குண்டு வீசித்தாக்குதல்களை நடாத்தியது.

அதைத் தொடர்ந்து மாலை 4 மணியளவில் இயக்கச்சிப் பக்கமாக படையினர் கடும் ஷெல் தாக்குதல்களை நிகழ்த்தினர்.

சுமார் ஒரு மணித்தியாலமாக இத்தாக்குதல்கள் இடம்பெற்றன. 79

## அகதிகளுக்கு சவர்க்காரம் அன்பளிப்பு

தீவகத்தில் இருந்து வந்து நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலய முகாமில் உள்ளவர்களுக்கு யாழ் கனகரத்தினம் மகாவித்தியாலய ஆசிரியர் சதாசிவம் இரண்டாயிரத்து முந்நூற்றி ஐம்பது ரூபா பெறுமதியான சவர்க்காரக் கட்டிகளை அன்பளிப்பாகவழங்கியுள்ளார். 19

## சைக்கிள் திருட்டு

பண்டத்தரிப்பு சந்தைக்கு சமீபமாக விடப்பட்டிருந்த பிரான்பற்றைச் சேர்ந்த க. ஐயாத்துரை என்பவரின் 3000 ரூபா பெறுமதியான சைக்கிள் நேற்று முன்தினம் காலை திருடப்பட்டுள்ளது

பண்டத்தரிப்பு சந்தைப் பகுதியில் அடிக்கடி சைக்கிள் திருட்டு இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது 15

## நிவாரணத்துக்கு...

தெரிவித்துள் கொழும்பிலிருந்து தொடர்ந்தும் பாவனைக்குதவாத அரிசி, கோதுமைமா, பால்மா வகை என்பனவே அனுப்பிவைக்கப்பட்டு வருவது தெரிந்ததே. 13

## துப்பாக்கி...

களை நடாத்தின.

படையினர் துப்பாக்கிப் பிரயோகத்தினையும் ஷெல் தாக்குதல்களையும் நிகழ்த்திக் கொண்டே முன்னேற முயற்சித்தனர்.

அரை மணி நேரமாக இத்தாக்குதல்கள் இடம்பெற்றன பின்னர் படையினர் பலத்த இழப்புகளுடன் பின்வாங்கிச் சென்றனர். 9

## கருணாநிதி...

தி. மு. க வுக்கு கிடைத்த படுதோல்வி தமது தோல்வியாகக் கருதி தாம் பதவியை இராஜினாமாச் செய்வதாக அவர் குறிப்பிட்டார்.

தேர்தலில் ஏற்பட்ட ராஜீவ் காந்தி அனுதாப அலை உண்மையான பிரச்சினைகளைப் பின்தள்ளி விட்டது என கருணாநிதி மேலும் தெரிவித்தார்.

# கிளிநொச்சி கூட்டுறவு லொறி கடவத்தையில் தாக்கப்பட்டது

கிளிநொச்சி பல நோ. கூ. சங்க லொறி கடவத்தை என்ற இடத்தில் வைத்து மறிக்கப்பட்டு அதில் பயணம் செய்த வர்த்தக முகாமையாளரும் சாரதியும் காடையர்களால் தாக்க பட்டனர்.

அத்தியாவசிய பொருள்களை எடுத்து வருவதற்காக இந்த லொறி கொழும்புக்குச் சென்றது.

லொறியில் சென்றவர்களின் பணமும் அபகரிக்கப்பட்டதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கொழும்பு செல்வதற்காக வவுனியாவிலும், வடக்கே வருவதற்காக அனுராதபுரத்திலும் பல வட பகுதி லொறிகள் இராணுவ அனுமதிக்காக காத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ப-6

## மெய்வல்லுநர் போட்டி

இம் மாதம் 26 ஆம் 27 ஆம் திகதிகளில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடாத்தப்பட விருந்த பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட மெய்வல்லுநர் போட்டிகள் அடுத்த மாதம் (ஜூலை) 4 ஆம், 5ஆம் திகதிகளில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

போட்டிக்குழுவினர் அண்மையில் கூடி ஆராய்ந்த பின் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். 12

## நிவாரணத்துக்கு அரைக்கிலோ சீனி

நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தற்போது அதன் கிளைகள் மூலம் உலர் உணவு நிவாரணத்திற்கு ஒரு குடும்பத்திற்கு அரைக்கிலோ சீனியை வழங்கி வருகின்றது. 33

## சைவசமயப் போட்டி

இலங்கை சைவ மன்றம் சைவசமய போட்டிகளை நடாத்தி போட்டிகளில் வெற்றியீட்டும் மாணவ மாணவிகளுக்கு பதக்கங்கள் உட்பட பல பரிசில்களை வழங்கவுள்ளது.

இப் போட்டிகளுக்கான நடவடிக்கைகளை இலங்கைச் சைவ மன்றம் மேற்கொண்டுள்ளது. அண்மையில் புலோலி கொத்தணி அதிபர் வி. சே, ஏகாம்பரநாதன் இளைப்பாறிய கல்விஅதிகாரி ப. சச்சிதானந்தன் ஆகியோர் இணைந்து எழுதிய ''சிவ நெறிச்சிந்தனைகள்'' நூலையும் வெளியிட்டு வைத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. 15

## பாதுகாப்பு...

ளிப்பதே இப்புதிய திட்டமாகும்

இத்திட்டத்திற்கு கொழும்பிலுள்ள பொது ஸ்தாபனங்களும் உதவி வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

## இராமர்...

காட்டுகிறது என கட்சியின் செயற்குழு தெரிவித்துள்ளது.

உத்தரப்பிரதேசத்தில் பாரதிய ஜனதா பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியை கைப்பற்றியுள்ளமை தெரிந்ததே.

## நம்பிக்கையில்லா...

பலத்தை நிரூபிக்கவே தாம் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதாக பி. ஜே. பி. தலைவர் அத்வானி குறிப்பிட்டார்.

## மட்டுநகர்...

ருமே நியமிக்கப்படவில்லை எனவும் அரசாங்க அதிபர் நிர்வாகத்துக்குக்கீழ்உத்தர்கள் கொண்டுவந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (50

## நேர்முகப் பரீட்சைக்கு செல்ல முடியாத நிலை

திருகோணமலையில் இம்மாதம் 29 ஆம் திகதி நடைபெறவுள்ள வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கு வடபகுதியிலுள்ளவர்கள் செல்ல முடியாத நிலையேற்பட்டுள்ள தால் இப் பரீட்சையை மாவட்ட ரீதியாக நடத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 33

## சோயா இறைச்சிப் பைக்கற் சந்தேகம் ஏற்படுகிறது

நிவாரணத்திற்கு வழங்கப்படும் சோயா இறைச்சிப் பக்கற்றுகளில் அதை தயாரித்த நிறுவனத்தின் பெயர், தயாரித்த திகதி, காலவதியாகும் திகதி போன்ற விபரங்கள் எதுவும் பொறிக்கப்படவில்லை.

வெறும் பொலித்தின் பைக்கற்றுகளில் அடைக்கப்பட்ட இந்த சோயா இறைச்சியின் தரம் பற்றி பாவனையாளர் புகார் தெரிவிக்கின்றனர்.

லேபல் அச்சிடப்படாது இவ்வாறு வழங்கப்படுவது உணவு, மருந்து பாவனைச் சட்டத்திற்கு முரணானது என்று சுகாதாரப்பகுதி வட்டாரங்கள் கூறுகின்றது. 13

## முல்லைத்தீவு தபால்கள் வாரம் தோறும் வருகின்றன

முல்லைத்தீவு மாவட்டத் தபால்கள் வவுனியாவில் இருந்து வாரம் ஒரு தடவை செஞ்சிலுவைச்சங்க முல்லைத்தீவு பிரிவினால் வாகனத்தில் எடுத்துவரப்படுகிறது.

இதேபோல முல்லைத்தீவு பகுதி தபால்களும் வாரம் தோறும் வவுனியாவுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. என முல்லைத்தீவு மாவட்ட தபால் அத்தியட்சகர் எஸ். பரராசசிங்கம் தெரிவித்தார். 33

## எரிமலை வெடிப்பினால் விமானத்தளம் மூடப்பட்டது

பிலிப்பைன்ஸ் பெனர்துவா எரிமலை வெடிப்பை அடுத்து அங்குள்ள கிளார்க் விமானத்தளத்தை மூடிவிடுவது என அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

எரிமலையின் வெடிப்பால் இத்தளம் முற்றாகச் சேதமடைந்து விட்டது. இங்கு பணிபுரிந்த ஒருதொகுதி அமெரிக்க விமானப் படையினர் நேற்று யூ. எஸ் மிட்வே என்ற கப்பலில் அமெரிக்கா திரும்பினர்.

எஞ்சிய படையினரும் விரைவில் நாடு திரும்புகின்றனர்.

## ஆளுநர் ராஜினாமா

பஞ்சாப் ஆளுநர் மல்ஹோத்ரா நேற்று தமது பதவியை ராஜினாமாச் செய்தார்.

இவர் தனது ராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளித்த போது அவரைத் தொடர்ந்து சில நாள்களுக்கு பதவியில் இருக்குமாறும் ஜனாதிபதி கேட்டுக் கொண்டார்.

பஞ்சாப்பில் வன்முறை அதிகரித்ததையடுத்து நேற்று நடைபெறவிருந்த தேர்தல் செப்டம்பர் மாதம் வரை பின்போடப்பட்டமை தெரிந்ததே.

## காலமானார்

### ஆறுமுகம் ஐயாத்துரை

கல்வியங்காடு ஆறுமுகம் ஐயாத்துரை காலமானார். இவர் யோகம்மாவின் அன்புக் கணவரும், சிவலிங்கம், சிவபாக்கியம், பேரம்பலம் ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஞ்சிதமலர், சிவலிங்கம், சரஸ்வதி ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவரஞ்சனி, பத்மசிறி, மதியழகன், கிரிஜா, வசந்தி, முகுந்தன், வசந்தன், தயாளன், தயாளினி ஆகியோரின் அன்பு பேரனுமாவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்;

வாசிகசாலை றோட், கல்வியங்காடு.

மருமகள் சிவலிங்கம்
மகள் சிவபாக்கியம்

06085


வெளிவந்துவிட்டது

வரலாறும், சமூகக்கல்வியும் ஆண்டு - 10 துரித மீட்டலுக்கான வினாவிடை

ஆக்கம்; க. சந்திரசேகரம்

ஆண்டு 11 மாணவர்களுக்கும் பயன்படக்கூடியது


இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷேர்ஸ், (பிறைவேட்) லிமிற்றட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சு வீதி 'லக்ஷ்மி' பில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 23.6.1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.